செ.வெ.எண்.29/2017 நாள்:15.07.2017

## பத்திரிக்கைச் செய்தி

சிவகங்கை மாவட்டத்தில் சத்துணவு மையங்களில் காலியாகவுள்ள **சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்** பணியிடங்களை பூர்த்தி செய்திட தகுதியான பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் 10.07.2017 வரை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிகளில் பெறப்பட்டன. தற்போது விண்ணப்பங்கள் பெறுவதற்கான காலத்தினை 21.07.2017 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

எனவே, தகுதியான விண்ணப்பதாரர்கள் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி உரிய சான்றுகளின் நகல்களுடன் விண்ணப்பத்தினை தொடர்புடைய ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி அலுவலகத்தில் நேரடியாகவோ / தபால் மூலமாகவோ 21.07.2017 அன்று 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும். காலதாமதமாக சமர்ப்பிக்கப்படும் அல்லது தபால் மூலம் காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும. இதற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாவர் என சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.